7—

வனத்துறையினர், கள்ளச்சாராயம் தயாரிப்போர் மீது வழக்கு போடுவதற்கு சட்டம் இயற்றுதல்.

*9356—திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

தமிழ்நாட்டில் உள்ள வனப்பகுதிகள், சமூகநலக் காடுகள் ஆகிய இடங்களில் கள்ளச் சாராயம் தயாரிக்கப்படும்போது காவல் துறையினர் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பில்லாததால், வனத்துறையினர் கள்ளச் சாராயம் தயாரிப்போர் மீது வழக்கு போடுவதற்கு சட்டம் இயற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறைஅமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் உள்ள வனப் பகுதிகள், சமூக நலக்காடுகள் ஆகிய இடங்களில் சாராயம் காய்ச்சுதல் மற்றும் அதன் தொடர்பான நடவடிக்கைகளைத் தடுத்து ஒழித்திட அப்பகுதியில் பணி புரியும் வனக் காவலாளர், வனக் காப்பாளர், வனவர், வனச் சரகர் ஆகியவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்றும், தவறினால், முதல் குறைப்பாட்டிற்கு எச்சரிக்கையும், பின்னர் கண்டு பிடிக்கப்படும் குறைபாட்டிற்கு தற்காலிகப் பணி நீக்கமும் செய்யப்படும் எனவும் அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள வனப் பகுதிகளில், சமூகநலக் காடுகள் மற்றும் அங்கே இருக்கக் கூடிய வனத்துறையில் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள் காய்ச்சுகின்ற காரணத்தால் வனத் துறை அதிகமாக பாதிக்கப்படுகிறது. ஆகையினால் காவல் துறைக்கு எப்படி அவர்கள் மேல் வழக்கு தொடர்வதற்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோ, அதே மாதிரி வனத்துறை அதிகாரிகளுக்கும் அந்த மாதிரி வழக்கு தொடர்வதற்கு சட்டத்தில் சட்டத் திருத்தம் கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றல் மிக்க முதலமைச்சராக, இங்கே நம்முடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, வனத்துறையில் இது போன்ற குறைபாடுகள் இங்கே எனக்கு சுட்டிக்காட்டப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1992 செப்டம்பர் 21]

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறையில் கள்ளச் சாராயம் காய்ச்சும்போது, வனத்துறை அழிக்கப்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? அதே நேரத்தில் இதுவரையில், வனத்துறையில் உள்ள வனத் துறை அதிகாரிகள் இதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, ஏதேனும் தகவல் கொடுத்துள்ளார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரவர்கள் இது போன்ற தகவல்களைத் தருவார்களேயானால், இந்த அரசு தயக்க மின்றி நடவடிக்கை எடுக்கும். நம்முடைய புரட்சித் தலைவி யார் தவறு செய்தாலும், அதைத் தண்டிக்கின்ற ஆற்றல் மிக்க முதலமைச்சர் தமிழகத்திலே இருக்கும் வரையில், யாராலும் கள்ளச் சாராயம் காய்ச்ச முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியில், கன்னியாகுமரியில் இருக்கின்ற ஃபாரஸ்டுகளிலே, அதிகமான இடங்களிலே— உங்கள் மூலமாகச் சொல்கிறேன்— கேரள எல்லையிலே, கள்ளச் சாராயம் காய்ச்சக் கூடாது என்ற காரணத்தினாலே கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் அனைவரும், கள்ளச் சாராய வியாபாரிகளும் மலைகளில் வந்துவிட்டார்கள். குறிப்பாக என்னுடைய பகுதியில் இருக்கின்ற பேச்சிப்பாறை, கல்வாரி ஃபாரஸ்டுகளிலே சாராயம் விற்றுக் கொண்டிருக்கி றார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, இதை உங்கள் மூலமாகச் சொல்கிறேன். இதில் மாண்புமிகு அமைச்ச ரவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரவர்கள் இன்றைய தினம், இந்த இடத்திலேதான் சொல்கிறார்களே தவிர, இதற்கு முன்னால், இதுபோன்ற குறைபாடுகள் இருப் பதைச் சுட்டிக்காட்டியிருந்தால், இந்த அரசு தயக்கமின்றி நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு :

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை காடுகளில் ஒருசில இடங்களில் கேரள எல்லைப் பகுதிகளில் உள்ள காடுகளில் கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றபோது காவல்துறையினர் அங்கு

சென்று அவர்களைப் பிடிப்பதற்கு சட்டமில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே அதற்கு வனத்துறையில் கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற பேர்வழிகளைப் பிடிப்பதற்கு பொதுவான ஒரு சட்டத்தினை இயற்றி, காவல்துறையினர் அங்கு சென்று, அவர்களைக் கைது செய்ய முயற்சிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் குறிப்பிட்டது ஒரே கருத்தைத்தான். கேரள மாநிலத்திலே கள்ளச் சாராயம் காய்ச்சிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நம்முடைய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதை வனத் துறையினுடைய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உடனடியாக அந்தப் பகுதியிலே இருக்கிற கள்ளச் சாராயத்தைத் தடுக்க வேண்டும் என்று இந்த அரசின் சார்பாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 8, திருமதி கே. மரியம்உல் ஆசியா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

8—

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்படுத்துதல்.

*9846 — திருமதி கே. மரியம்உல் ஆசியா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்பாடு செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருமதி கே. மரியம்உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு விடுமுறை நாட்களிலே பொது மக்கள் பெரிதும் செல்வதற்கு வசதியாக, அதிக அளவில் பஸ்கள் விடப்படுமா ? மேலும் அந்த அறிஞர் அண்ணா உயிரியல